MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY
RECEIVED
23 SEP 1954
THE TANJORE • TANJORE.

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௯

திருவள்ளுவர் யாண்டு ௲௯௮௫
சய—ஆவணி
1954 — ஆகஸ்டு

மலர் ௫

## அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், அருந் தமிழும்.

---

தமிழ் மொழிக்குப் பல வகையாலும் மேம்பாடு செய்வதற்கென எழுந்த பல வேறுவகைப்பட்ட நிலையங்களில், அண்ணாமலைப் பல் கலைக் கழகம் தலை சிறந்த தென்பதனை நம்மவர் யாவரும் அறிவர். இந்தப் பல் கலைக் கழகம் தோன்றுவதற்கு முன்னிருந்தே தமிழ்த் தொண்டாற்றி வரும் நிலையங்களுள் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தலை சிறந்த தென்பதையும் யாவரும் அறிவர். முப்பது ஆண்டுகட்கு முன்பு தமிழ்ப் பல் கலைக் கழகம் ஒன்று நிறுவ வேண்டும் என்ற முயற்சியும் பரபரப்பும் தமிழகத்தில் உலவி வந்த பொழுது பெருங்கொடை வள்ளல், செட்டிநாட்டரசர், வீரத் திரு. அண்ணாமலைச் செட்டியார் அவர்களுடைய பரந்த உள்ளத்தின் பயனாக அண்ணாமலைப் பல் கலைக் கழகம் தோன்றவே, தமிழ்ப் பல் கலைக் கழகத்தால் பெறக்கூடிய நன்மையனைத்தையும் அண்ணாமலைப் பல் கலைக் கழகத்தால் தமிழகம் பெற்றுவிடும் என்னும் ஓர் உறுதி பிறக்கவே, தமிழ்ப் பல் கலைக் கழகத்தைத் தோற்றுவிக்கும் முயற்சியும் நெகிழ விடப்பெற்றது.

அண்ணாமலைப் பல் கலைக் கழகம் தோன்றிய நாளிலிருந்து நம் சங்கம் அதனோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கின்றது. அண்ணாமலைப் பல் கலைக் கழகச் சட்டப்படியே பேரவைக்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையையும் நம் சங்கம் பெற்றுள்ளது. காலஞ் சென்ற, தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை யவர்கள், இராவ் சாகிபு, ஐ. குமாரசாமி பிள்ளை யவர்கள், முத்தமிழ் வள்ளல், ஆ. பா. அருளானந்தசாமி நாடாரவர்கள் முதலிய பல பெரியோர்கள் நம் சங்கச் சார்பில் பல் கலைக் கழகப் பேரவை உறுப்பினராக இருந்து தொண்டாற்றி வந்துள்ளார்கள். தனித் தமிழ்ப் பகுதியில் பல தூய தமிழ்ச் சொற்கள் வழங்குவதற்கும் நம் சங்க உறுப்பினர்களே முதலாக இருந்துள்ளனர். இப்பொழுதும் நம் சங்கச் சார்பில் பேரவையின் உறுப்பினராக இருந்து தொண்டாற்றும் திருவாளர், நீ. கந்தசாமி பிள்ளை யவர்கள் தமிழ்ப் பகுதி, கம்பராமாயணப்

பதிப்பு ஆயவை குறித்துத் துணைவேந்த ரவர்கட்கு இரண்டாண்டுகளாக எழுதிவரும் செய்திகளின் சுருக்கம் நம் பொழிலில் வெளி வந்துள்ளதை அன்பர் அறிவர். ஆனால் இவர் எழுதிய கடிதங்களெல்லாம் எந்த அளவில் ஏற்றுப் பின்பற்றப்படுகின்றன என்பதைப்பற்றி யாம் தெரிந்துகொள்ள முடியவில்லை. தமிழ்ச் சங்கத்தின் சார்பில் செல்லும் உறுப்பினர் தமிழின் நலங்களைப் போற்றும் கடமையுடைய ராவதோடு, அவ்வப்போது, தமிழ் நலம் எவ்வாறு பல் கலைக் கழகத்தாரால் மேம்படுத்தப் படுகின்றது என்ற செய்திகளையும், நம் சங்க உறுப்பினர்கட்கும் தமிழ் மக்களுக்கும் தெரிவிக்கவேண்டிய பொறுப்பும் உடையவராவார். தமிழ் நலம் புறக்கணிக்கப் படுமேல், தளராது தமிழைப் போற்றும் தூய கடமையும் கொண்டவ ராவார். தமிழ் நலம் ஒன்றையே கருதிப் புறம்பான சூழலில் மயங்காது தொண்டு செய்யவேண்டும் என்பதையே இவ்வுறுப்பினரைத் தேர்ந்தெடுத்த அன்பரெல்லாம் கருதுகின்றனர்.

இந்த நிலையில் தமிழ் நலங்கருதிச் சில செய்திகளைத் தெரிந்து கொள்ளுவதற்காக நம்முறுப்பினர் விடுத்த வினுக்கள் 22—9—54ல் நடைபெற இருக்கும் பல்கலைக் கழகப் பேரவைக் கூட்ட நிகழ்ச்சியில் சேர்க்கப்பெற்று விடையளிக்கப் பெறவேண்டியதாக இருந்தும், அவ்வினுக்கள் சேர்த்துக்கொள்ளப் பெறவில்லையென்று நம்முறுப்பினருக்குப் பல்கலைக்கழகப் பதிவாளர் ஒரு கடிதம் 17—9—54ல் அனுப்பியுள்ளது மிகவும் வியப்பாக இருக்கின்றது. பல்கலைக் கழகப் பதிவாளர் கடிதத்தை அன்பர்கள் கருதும் வண்ணம் இத்துடன் இணைத்துள்ளோம். பல்கலைக் கழகச் சட்டம் ஒன்பதாவது அதிகாரம் இருபத்தைந்தாவது கட்டளைப்படி நம் முறுப்பினர் கேள்விகள் சேர்க்கப்பெருது விடப்பட்டன என்று குறிப்பிட்டுள்ளார். அக்கட்டளை கூறுவது என்னவென்ருல், பல்கலைக்கழக "ஆட்சிக்குழு (Syndicate) ஒரு கேள்வியைச் சேர்த்துக்கொள்ளுவதைப் பற்றி முடிவு செய்யுமென்றும் அக்குழுவின் எண்ணத்தில் (A) எந்தக் கேள்வியாவது, கேள்வி கேட்கும் உரிமையை இழிவுபடுத்தியிருக்கின்றதென்ருவது, (B) பல்கலைக் கழகத்தின் நன்மையும் கேள்விக்குக் கூறவேண்டிய விடையும் மாறுபட்டுள்ளதென்ருவது தோன்றினுலும், கேள்விகளைச் சேர்க்காமல் விட்டுவிடலாமென்று இருக்கின்றது.

நாம் பார்த்த அளவில் நம்முறுப்பினருடைய கேள்விகள் இந்தக் கட்டளையின்படித் தள்ளிவிடக் கூடிய நிலையிலில்லை என்றே கருதுகின்ரேம். அவருடைய கேள்விகளின் கருத்தைச் சுருக்கமாகச் சொல்லுவோமானல், நாட்டு மொழி, உயர்தனிச் செம்மொழி, பயிற்றுமொழி என்ற மூவகை நிலைகளில் நம் தமிழ்மொழி பல்கலைக் கழகத்தில் எந்த இடத்தைப்

பெற்றுள்ளது என்பதும் சென்ற கால் நூற்றுண்டில் இம் மூவகை நிலையிலும் மொழியைப் போற்றி அடைந்த பயன் என்ன என்பதும், சென்ற ஐந்து ஆண்டுகளில் தமிழ்ப் பகுதிக்கும் பிற பகுதிகளுக்கும் செலவிட்டுள்ள தொகை எவ்வளவென்பதும் தமிழ்ப் பகுதிக்கும் பிற பகுதிகளுக்கும் ஏற்பட்டுள்ள வைப்பு நிதிகளின் மூலப் பொருமானமும், ஆண்டு வருவாயும் எவ்வளவென்பதும் தெரிந்துகொள்வதற் கெழுந்ததே முதற் கேள்வியாகும்.

இரண்டாவது கேள்வி, தமிழ் ஆராய்ச்சிக்கழகத்தின் வேலைகளைத் தெரிந்துகொள்ளுவதற்கும், அப்பகுதிக்கென அதிகமாக இந்த ஆண்டு ஒதுக்கிவைத்துள்ள ரூபா ஐம்பதினுயிரம் எவ்வகையில் செலவிடப்பட இருக்கின்றதென்பதையும்பற்றியதாகும்.

மூன்ருவது கேள்வி தமிழ் ஆராய்ச்சிக்கழக வேலைகள் நன்ருகக் கண்காணிக்கப் பெறுவதற்கு ஏதேனும் ஒரு குழு ஏற்படுத்தப்பெற்றிருக்கின்றதா என்பதுபற்றியும், அப்பகுதியிலுள்ள தலைவர்கள், புலவர்கள் செய்துவரும் வேலைமுறைகள்பற்றியும், சில நியமனங்கட்கு விளம்பரம் செய்யப்பட்டிருந்த தகுதிப்படியே நியமனம் செய்யப்பட்டிருக்கிறதா என்பதுபற்றியும் தெரிந்துகொள்ளுவதற்காகும்.

ஏனைய கேள்விகளும் இவைபோன்றனவேயாகும். அவைகளைப் பிற்சேர்க்கையில் காண்க. இந்தக் கேள்விகள் மேற்கூறிய கட்டளைப்படி விலக்கக்கூடிய கேள்விகளென்று நாம் கருதவில்லை. ஆட்சிக் குழுவினரும் தங்கட்கு அரணுக அமைந்தகட்டளைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் மிக மிகக் கருதி நடுவுநிலை பிறழாது உலகம் ஒப்புக்கொள்ளும் முறையில் நடக்கக் கடமைப் பட்டுள்ளனர் என்பதை மறந்துவிடக்கூடாது. இவ்வாறு சட்டங்களாலோ மக்களாலோ கொடுக்கப்பட்ட உரிமைகளைத் தங்கள் நலன்கருதி நடுவுநிலை பிறழ்ந்து பயன்படுத்திக்கொள்ளும் கூட்டங்களால் உலகமடைந்துள்ள தீங்குகளை, உலக வரலாற்றின் ஒவ்வொரு பக்கமும் கூறுகின்றது. உலகத்தில் ஏற்படுகின்ற மனமாறுதல்கட்கும் புரட்சிகளுக்கும், பூசல்கட்கும், போர்களுக்கும், ஏன் அழிவுக்கும்கூட உரிமைகளை நடுவுநிலை பிறழ்ந்து பயன்படுத்திய கூட்டங்களே நாற்றங்கால் என்பதை யாவர் மறுப்பர்? நம்முறுப்பினர் பல்கலைக்கழகத்தோடு ஒத்துழைத்துத் தமிழாக்கம் ஒன்றையே நாடுபவர் என்பதை அவருடைய முன் கடிதங்களும் ஏனைய செயல்களும் அவருடைய வினக்களை ஏற்றுக்கொள்ள மறுத்த இந்த ஆட்சிக் குழுவினரே மறுக்க முன்வரார் ஏன்பது திண்ணம். அவ்வாறிருந்தும் ஏன் இவ்வினக்களை ஏற்றுக்

கொண்டு, விடையிறுக்க இயலாது என்ற ஒரு விடையாவது கூறியிருக்கக் கூடாது? கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள கழகங்கள் மக்கள் ஆட்சிக்கு எடுத்துக்காட்டாகத் திகழவேண்டாமா? பெரும்பான்மையோராக ஒன்று சேர்ந்து, நடுவுவிகந்த நடையை மேற்கொள்ளல் நாட்டுக்கு நன்மை விளைக்கக்கூடிய தொன்றா? சட்டம் கூறியுள்ள அரண்கள் எவ்வளவிடங் கொடுக்குமாயினும் நடுவுநிலை பிறழ்ந்தக்கால் அவ்வரண்களெல்லாம் மெல்ல மெல்ல நழுவுவனவாகும் என்பதை நாம் கூறவேண்டுமா?

தமிழாக்கம் கருதிய தமிழ் வள்ளல் செட்டிநாட்டரசர், வீரத்திரு அண்ணாமலை செட்டியாரவர்களுடைய உள்ளக்கிடையை அறிந்துள்ள பேரன்பர் அனைவரும் இப்போதைய ஆட்சிக்குழுவினர் அவ்வுள்ளத்திற்கு ஒத்த வண்ணம் செயலாற்றுகின்றார்களா? என்பதைச் சிந்திப்பார்களாக.

---

## இளங்கோவடிகள் தமிழ் கழகம்
### 11-ஆம் ஆண்டுத் தொடக்க விழா.

திருவள்ளுவராண்டு 1985 ஆடித்திங்கள் 30-ஆம் (14—8—54) சனிக்கிழமை கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் கழகத் துவக்க விழா தஞ்சை மாவட்ட முறைவலர் திரு, K. S. வேங்கடராமன் I. C S. அவர்கள் சீர்மிகும் தலைமையில் நிகழ்ந்தது. அதுபோழ்து குடந்தை அரசினர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், திருவாளர். A. கிருட்டின மூர்த்தி M. A. B. L, அவர்கள் "சிலப்பதிகார ஆசிரியர் காலம்" என்னும் பொருள் பற்றி அரியதோர் விரிவுரையாற்றினர். தலைவர் தம்முடைய முன்னுரையில் கடவுள் சம்பந்தமான இலக்கியங்கள் தாம் தம்மை மிகவும், கவர்ந்ததாயும், மாணவர்கள் நல்லொழுக்கமுடனும், கடவுட் பற்றுடனும் பண்டையோர் நூல்களை நன்கு துருவி ஆய்ந்து பயிலவேண்டுமென்றும் கூறினர்கள். விரிவுரையாளர், சிலப்பதிகார ஆசிரியர் காலம் 8-ஆம் நூற்றூண்டென்று கூறுவது பொருத்தமல்ல என்பதை அவர்கள் கூறும் காரணங்களை ஒவ்வொன்றாகக் காட்டி மறுத்துத் தம் கோள் நிறுவினர். தலைவர் முடிவுரையோடு அமைச்சர் நன்றி நவிலச் சங்க வாழ்த்தோடு விழா இனிதின் நிறைவெய்தியது.

---

# கம்பராமாயணப் பதிப்பும் நிலைமையும்.

நீ. கந்தசாமி

(முற்றொடர்ச்சி, துணர் ௩௰—மலர் ௬—பக்கம் 131.)

இசைப் பாட்டாகப் பாடுவதும், சில சமயங்களில் ஒருவரோ டொருவர் பேசுவதாகவும், தனியாகவொருவர் பேசுவதாகவும், கதைத்தொடர்ச்சியைக்கூறுவதாகவுமுள்ள பகுதிகளைப்பிரித்து ஒரு சொல்லேனும் விடாமலும் புதுவதாகச் சேர்க்காமலும் இசை நாடகமாகப் பொருத்திப்பாடிக் காண்பிப்பதும் அவருடைய சிறப்பியல்பு; வேறு எவரிடமும் காணாதது. இது முத்தமிழ்ச் செல்வம் என்று கூறுவார். பிரசங்கம் செய்யும் போது, ஒரு பாட்டைச் சொல்லுவதற்கு முன்பு முன்னுரை யாகச் சில உலகியற் பொது விதிகளையோ நிகழ்ச்சிகளையோ சொல்லிப் பின்னர் பாட்டைச்சொல்லி அதன் சொற்பொருளை விளக்கி அதன்மேல் தான் முன்னுரையாகச் சொல்லியவை பாட்டில் அமைந்துள்ள தன்மையை அழகாக எடுத்துக்காண்பிப்பார். உதாரணமாக "கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்" என்ற பாட்டைச் சொல்லுமுன் "உலகத்தில் ஒருவரை ஒருவருக்கு அறிமுகப்படுத்த வேண்டுமானல் அவருடைய இடம், பொருள், ஏவல் என்னும் மூன்றையும் முதலில் சொல்லுவது ஒரு பழமையானமுறை; இன்றும் கையாளப்படுகிறது. இடம் என்பது, ஒருவர் வாழும் இடம், உரிய நிலம் முதலியனவுமாகும். பொருள் என்பது கல்வி, செல்வம், குணம், சார்பு, வன்மை முதலியனவாம்; ஏவல் என்பது அவருடைய ஆணைவழி நிற்கும் கடப்பாடுடைய மக்கள்; நாங்களெல்லாம் ஐயா அவர்களுடைய (மகா வித்துவான் பிள்ளையவர்களைக்குறித்து) ஏவல், மக்களெல்லாம் பெற்றோருடைய ஏவல், குடிகளெல்லாம் அரசனுடைய ஏவல். பணிசெய்வோரெல்லாம் தலைவருடைய ஏவல் என்றபடி; இப்பாட்டிலும் இம்முறையே ஆளப்படுகிறது" என ஒவ்வொன்றையும் விரித்துக் கூறுவார். அதன்மேல் ஒவ்வொரு சொல்லிலும் தொடரிலுமுள்ள நயங்களைச் சொல்லிக்கொண்டே செல்வார். 'இருகரை என்று சொல்லவே நாம் தங்கியிருக்கும் இந்தக்கரையும் அவனுடையதே, நாம் குகன் எல்லையிலிருக்கின்றோம், ஆகையால் நாம் அவனுக்கான அரச மரியாதைகளைச் செய்யவேண்டுமென்பதையும் குறிப்பிட்டார்' என்று இனிமையாகப் பல நீதிகளை

யும் இடையிடையே கேட்போர் மறவாவண்ணம் கூறுவார். பாடம் சொல்லும்போது மட்டில் இலக்கண அமைதிகளைச் சொல்லுவார், சிலபடலங்களையும்பகுதிகளையும் ஒன்ருகச்சேர்த்துப்படித்துக் காட்டி, அவ்வவற்றின் நடையை, யானை நடை' குதிரை நடை, அன்னநடை என்ற பல பிரிவுகளில் அடக்கிக் காட்டுவார். யாப்பிலக்கணப் பகுதியின் நுட்பங்களெல்லாம் இனி யாவர் சொல்லுவார்? அச்சுப் புத்தகங்கள் அப்போது வந்துகொண்டிருந்தாலும் ஏடுகளை வைத்துத்தான் பாடம் சொல்லுவார்; அச்சுப் புத்தகங்களில் சில இடங்கள் பிழையாக விருக்கின்றனவென்பது அவருடைய எண்ணம். பல வித்துவான்களிருந்த தஞ்சைமா நகரத்தில், ஆறுமாதம் தொடர்ந்து தான் செய்த கம்பராமாயணப் பிரசங்கத்தைப்பற்றி அடிக்கடி சொல்லுவார். அவர் பிரசங்கம் செய்த காலத்தில் அவரளவு புலமை வாய்ந்தோர் ஒருவரும் தஞ்சையில் இல்லையென்று என் தகப்பனுர் சொல்லுவது வழக்கம், இதைப் பிள்ளையவர்களும் வியந்தவோடு தஞ்சையிற் புலமை குறைந்துள்ளதற்கும் வருந்தினுராம். கவிராயர் வைத்திருந்த ஏடு பிள்ளையவர்களே தன் கையினுல் எழுதிய ஏடு; நாங்கள் படித்ததும் அந்த ஏட்டைப் பார்த்தும் படி யெடுத்துந்தான் என்பது எங்களுக்கு ஒரு பெருமை "

வந்திருந்த உறவினர்களெல்லோரும் தமிழ்ப் பயிற்சியும், அன்பும் உடையவர்களானபடியால் அவர்கள் தங்கியிருந்த நாலைந்து நாட்களும் கம்பராமாயணப்பேச்சே நடந்து கொண்டிருந்தது. முதல் நாளிலேயே "வந்தெதிரே தொழுதானை" என்னும் பாட்டில், முதலில் தொழுதது யார்? அடியில் வீழ்ந்தது யார்? என்ற செய்தியில் பிரிவு ஏற்பட்டு பரதன் என்று ஒரு சிலரும் குகன் என்று ஒரு சிலரும் பேசத் தொடங்கினுர்கள். இந்த சொற்போரில் இருகட்சியாரும் மிகவும் மிகவும் அழுத்தமாகத் தங்கள் தங்கள் சான்றுகளையும், மேற்கோள்களையும் சொல்லும்போது பல அரிய செய்திகளும் பாட்டுக்களும் வெளிவந்தன. ஆனுல் ஒன்றும் முடிவடைந்ததாக எனக்குத் தெரியவில்லை. இந்த கூட்டத்தில் வந்திருந்தவர்களில் ஆண்டில் முதிர்ந்தவரும், பிள்ளையவர்கள்பால் பாடங்கேட்டவர்களில் முதலாவது வகுப்பைச் சேர்ந்தவரும், பின்னர் அயல் நாடுகளுக்குச் சென்று வாணிகத்தால் செல்வம் பெருக்கியவருமான சாமிநாத பிள்ளை என்பவர் கம்பரிலிருந்து சில அரிய செய்திகளைத் தான்கேட்டபடி எடுத்துக் கூறி எல்லோரையும் மகிழ்வித்தார்; அவர் பேசிமுடிந்து எல்லோரும் நீராடச் செல்லும்போது ஒருவர் சாமிநாத பிள்ளையைப் பார்த்து 'அந்த

சங்கப் பாட்டை விளக்காமல் விட்டு விட்டீர்களே" என்று கேட்க அவர் எப்படி விளக்க முடியும் சங்கப் பாட்டு மிகவும் கடினமானதல்லவா, சங்கப் புலவர்கள்தான் வரவேண்டும் என்று நகைத்துக்கொண்டே சொன்னார், எனக்கு, 'சங்கப்பாட்டு' என்றால் இன்னதெனத் தெரிந்து கொள்ளவேண்டுமெனும் ஆவல் உண்டாயிற்று. வீட்டிலிருந்தவர்களில் என் பெரிய பாட்டனார் பெயரர்களிலிருவர் சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்பு சென்னை கிருஸ்த்தவக் கல்லூரியில் பயின்று B. A. பட்டம் பெற்றவர்களிருந்தார்கள். என்னிடம் மிகவும் அன்புடையவர்கள், நான் நல்ல கல்வியுடையவனாக வேண்டுமென்னும் கருத்துடையவர்கள். ஒருவர் அக்காலத்து கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியர்களில் ஒருவரான அறிஞர் லாசரஸ் (Dr. Lazarus) என்பவரின் முதல் மகளை மணந்து கிறிஸ்த்தவ சமயத்தைத் தழுவினவர். இன்னொருவர் சூரியநாராயண சாஸ்திரியாருடன் ஒரு சாலை மாணாக்கராகப் பயின்றவர். பிற்காலத்து இந்தியன் பாங்கியின் அமைச்சராக நெடுநாளிருந்து நற்புகழ்பெற்ற நடு நிலையினர். அவர்களிடம் என் ஐயத்தைக் கேட்டேன். அவர்கள் "இப்போதுள்ள கூட்டம் போனவுடன் சொல்லுகிறோம், இந்த சமயத்தை விடாமல் நீ சாமிநாத பிள்ளையிடம் ஏதாவது பாடம் கேட்டுக்கொள்; அவர் பெரியவர்களிடம் படித்தவர், மேலும் எவ்வளவோ தொழில் முறைகளில் ஈடுபட்டிருந்த காலத்தும் எதையும் கருதாது பிறாநியாவண்ணம் தமிழ் பயின்றவர். தமிழில் அளவுகடந்த அன்புள்ளவர்; ஆனால் அவர் சொல்லுகிறபடி நீ கேட்டுக்கொள், எதையும் அதிகப்பிரசங்கத்தனமாகச் சொல்லாதே" என்றார்கள். அவ்வாறே அன்று மாலை சாமிநாத பிள்ளையிடம் ஏதாவது கம்பராமாயணப் பாட்டு சொல்லித்தரவேண்டுமென்று கேட்டேன். அவர் மிகவும் அன்புடன் "நீ கம்பராமாயணம் படிக்க விரும்புவது நல்லது; ஆனால் எடுத்தவுடனேயே கம்பராமாயணத்தைப் படிப்பதைவிட சில அடிப்படையான நூல்களைப் படித்துக்கொண்டு இதற்கு வருவதுதான் தகுந்த முறையாகும். பாட்டுக்களை மனப்பாடம் செய்தும் கதையைத் தெரிந்துகொண்டும் கம்பராமாயணப் புலவராகிவிட முடியாது. நான் இவ்விடம் நாலைந்து நாட்கள் தங்குவேன்; அந்த நாட்களில் சில பாட்டுகளைச் சொல்லித் தருகிறேன். நீ முறையாகப் படிக்கவேண்டும். உண்மையான புலமையை அடையவேண்டும். ஆகையால், நாளை அதிகாலையில் நான் முதன் முதலாக எங்கள் ஆசிரியர் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்ட "திருமுருகாற்றுப்படையை" உனக்குப் பாடம் சொல்லுகிறேன். அதைப் பூர்த்தி செய்துகொண்டு, பிறகு கம்பர் பாடல்களில் சில சொல்லித்தருகிறேன்" என்று சொல்லி, அவ்வாறே மறுநாள் அதிகாலையில் முறைப்படி பாடம் தொடங்கி மூன்று நாட்களில் திருமுருகாற்றுப் படையைப் பாடம் சொல்லி முடித்து, பிறகு சாஸ்வதியந்தாதியில் சில

பாடல்களைச் சொல்லிக்கொடுத்து அதன்மேல் கம்பராமாயணத்தில் சில பாடல்களை நான் மனதில் கொள்ளும் வகையில் சொல்லிக் கொடுத்தார். ஊருக்குப் புறப்படும்போது 'திருமுருகாற்றுப்படை பரிமேலழகருரை' என்ற ஒரு அச்சுப் புத்தகமும் கொடுத்து, 'திருவெண்காடு வேங்கடசாமி நாயுடு இவ்விடம் வந்துவிட்டபடியால் மேற்கொண்டு கம்பராமாயணப் பாடல்கள் சிலவற்றை அவரிடம் நீ படித்துக்கொள்ளலாம்; கம்பராமாயணம் வரையில் பலரிடமும் கேட்டு பக்தியுடன் படித்தவர். மேலும் உங்கள் வீட்டிற்கு உறவினரினும் மிகுந்த அன்புடையவர். என்று சொல்லி அருகிலிருந்த நாயுடுவிடம் எனக்குச் சொல்லவேண்டிய பாடங்களையும் ஒருவாறு சொன்னார். எனக்கு 'சங்கப்பாட்டு' என்றால் என்னவென்பதை சாமிநாத பிள்ளையிடமே கேட்டுத்தெரிந்துகொள்ளவேண்டுமென்ற ஆசையாலும், அவரும் ஊருக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தபடியாலும் உடனே அவரைக் கேட்டேன். "உனக்கு யார் சொன்னார்" என்று கேட்டார். நீராடச் சென்றுகொண்டிருந்தபோது நிகழ்ந்ததை நினைவுறுத்தினேன். நின்றுகொண்டிருந்தவர், உட்கார்ந்து "அதுவா ! சங்கப்பாட்டு" என்றவுடன் நான் மலைத்து விட்டேன்; இப்படித்தான் பிசகுகள் நேருகின்றன. அது 'சங்கப்பாட்டல்ல' 'சங்கைப்பாட்டு' சங்கை என்றால் சந்தேகம் சந்தேகமுள்ள அதாவது அர்த்தம் தெரியாத பாட்டு என்பது பொருள். படித்தவர்கள் கூட பேசும்போதும் எழுதும்போதும் சொற்கள் எழுத்துக்கள் இவைகளின் உருவத்தை வாயுங்கையும் போனபடி வழங்கிக் கெடுத்து விடுகிறார்கள்; இந்த சிறு பிசகுகளால் பாடங்களும் கருத்துக்களும் எவ்வளவோ மாறி தடுமாற்றம் செய்து நல்ல புத்தகங்களையும் கருத்துக்களையும் கெடுக்கின்றனர். கம்பராமாணத்தில் சங்கைப் பாட்டுக்கள் இரண்டுவிதமாகிவிட்டன. பொருள் இதுதானா என்ற சங்கை ஒரு புறம்; பாட்டு கம்பர் பாடியதுதானா என்ற சங்கை ஒரு புறம் "என்று பலவாறு ஒருமணி காலம் புலம்புவதுபோல் பேசி" சங்கப் பாட்டு என்றவுடன் இந்தப் பையன் அவ்வளவு பெரிய பெயரை எங்கே கேள்விப்பட்டான் என்று திடுக்கிட்டுப் போனேன்; பின்பு பார்த்தால் விஷயம் இப்படியிருக்கிறது; 'எழுதினவன் ஏட்டைக்கெடுத்தான் பாடியவன் பாட்டைக்கெடுத்தான்' என்று பழமொழியோடு 'பேசியவன் பெயரைக் கெடுத்தான் என்று சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான்' என்று முடித்தார், நாழிகை கழிந்தபடியால் அவர் ஊருக்குப் புறப்படுவதும் நின்றுவிட்டது. இரவு நெடுநேரம் வரையிலும் பழமையான பல அரிய செய்திகளையும், திருவிளையாடல், அரிச்சந்திர புராணம் முதலியவைகளிலுள்ள சில சங்கைப் பாட்டுகளுக்கு விளக்கமும் சொன்னார். தன் ஆசிரியரைப்பற்றியும், உடன்பயின்றவர்களைப்பற்றியும், அக் காலத்துப்

புகழ்பெற வாழ்ந்த இராமலிங்கசுவாமி, நாவலர், தாண்டவராயத்தம்பிரான் முதலியவர்களைப்பற்றியும் கேட்போர் மனமுருகப் பேசிக்கொண்டிருந்தார். காலையில், புறப்படும்போது அவர் எனக்குக் கூறிய அறிவுரை "இந்த ஐம்பது ஆண்டுகளில், தமிழ்ப்படிப்பு பலவாக மாறிவிட்டது. அரைகுறையெல்லாம் அம்பலம் ஏறிவிட்டது ஊரைக்கெடுக்க உரைகளும் புதிதாக எழுதி அச்சாகி வருகின்றன. தமிழுக்கும், உண்மையாகத் தமிழ் படித்தவர்களுக்கும் மதிப்பும் குறைந்துவிட்டது. அச்சிட்ட புத்தகங்களில் பாட்டு பாதி புத்தகமும் பிழைதிருத்தம் பாதியுமாகக் காணப்படுகிறது. சுத்தமான பதிப்புகள் குறைவாகவிருக்கின்றன. ஆகையால் நீ புத்தகங்களைப் படிககும்போது தானகப் படித்துத் தடுமாறுமல் தகுந்தவர்களிடம் பாடம் கேட்டுக்கொள். அதிக ஆசைப்பட்டு அரைகுறையாக ஆயிரம்பாட்டைப் படிப்பதைவிட வரையறையாக நூறு பாட்டைப் படிப்பது நல்லது. எந்த காலத்திலும் அச்சுப் புத்தகத்தில் காணுவதையும், ஆசிரியர் சொல்லுவதையும் ஆராய்ச்சி செய்து தெரிந்து மேலே படிப்பதுதான் நல்லது. காலம் மாறிவிட்டது; ஆகையினல் தமிழிலேயே பித்துக்கொண்டு ஆங்கிலப் படிப்பை அசட்டை செய்துவிடாதே. இங்கிருக்கும் உன் அண்ணன்மார்கள் போல் நாலுகைச் சட்டை போட்டுக்கொள்ளுவதற்கான படிப்பைப் பார். அதை முடித்துவிட்டால் பிறகு ஆயுள் வரையும் தமிழைப் படிக்கலாம். முருகன் உனக்கு அருள் செய்வார்".

அவர் ஊருக்குச் சென்றபின்பு, வீட்டில் தங்கியிருந்த முன்சொன்ன என் அண்ணன்மார்களை மறுமுறையும் 'சங்கப்பாட்டு; பெரிய பெயர்' என்று என் அவர் சொன்னர் என்பதைக்கேட்டேன் அவர்கள் சங்ககாலப் பாட்டுகளைப் பற்றியும் சங்கங்களை ப்பற்றியும் சுருக்கமாகச் சொன்னதுடன் தாங்கள் B. A. வகுப்பில் படித்தபோது 'மதுரைக்காஞ்சி' என்ற சங்கப் பாட்டு பாடமாக இருந்ததாகவும் தங்களுக்கு அது ஒன்றுமே புரியவில்லை என்றும் சொல்லி 'நீ அதையெல்லாம் இப்போது கேட்டுப் பயனில்லை. முதலில் எளிமையான நூல்களைப்படி" என்று கூறினர்கள். பின்னர் தங்களுக்கு 'மில்லர்' (Dr. Millar) என்னும் தலைவர் சொல்லிக் கொடுத்த மொழிநூல்முறை, இலக்கிய வாராய்ச்சி முறைகளை நான் அறியும் அளவில் சொல்லி அம்முறைகளில் ஒரு சுவையை உண்டு பண்ணினர்கள். தாங்கள் B. A. வகுப்பில் படித்த 'கம்பராமாயணம் குகப்படலமும், பெரிய புராணம், கண்ணப்ப நாயனர் புராணமும் சேர்ந்த ஒரு புத்தகம் சுப்பராயச் செட்டியார் உரையுடன் அகப்பட்டதையும் கொடுத்து படிக்கச் செய்தார்கள். அந்தப் புத்தகத்தைப் பார்த்தவுடன், அவர்களில் பெரியவர் பின் வருவாறு தன் பழைய நினைவுகளைக் கூறினர்.

"எவ்வளவு தான் அழுத்தம் திருத்தமாகத் தமிழைப் படித்தாலும் பரந்த இலக்கியப் பயிற்சியுடையவர்கள் பார்க்கும்பொது காணப்படுகிற உண்மைகள் ஆச்சரியமாக இருக்கின்றன. இந்தப் புத்தகத்தில் பெரிய புராணமும், இராமாயணமும் சேர்ந்திருப்பதை, இலாசரஸ் வேடிக்கை யாக மில்லரிடம் "சண்டையிட்டுக்கொள்ளும் சமயம் இரண்டும்" இங்கு ஒன்றிவிட்டன என்ருர். "எப்படி" என்று மில்லர் துரை கேட்ட பொழுது; ஒன்று சைவம் ஒன்று வைணவம், இங்கு இரண்டும் ஒன்ருகச் சேர்த்து வெளியிடப்பட்டிருக்கிறது என்ருர். உடனே அருகிருந்தார் ஆச்சரியப்படும்படி மில்லர் துரை 'ஒற்றுமையுள்ள பாகம் உங்களுக்குப் புலப்பட வில்லையா? கண்ணப்பனும் வேடன்; குகனும் வேடன்; இரு வரும் அன்பின் சிகரம்; இருவரும் எவ்வகையான கைம்மாறும் கருதாமல் தொண்டு செய்தவர்கள், என்று பல விஷயங்களைச் சொல்லி பைபிளி லிருந்தும் (Bible) வேறு இலக்கியங்களிலிருந்தும் ஒத்த பகுதிகள் பல ற்றைக் காண்பித்து, அன்பு, குகன் என்ற பெயரில் மலர்ந்து கண்ணப் பன் என்ற பெயரில் கனிந்தது, என்ருர். மற்ருெரு சமயம் சின்னசாமி பிள்ளை தன் புத்தகத்தில் ஏதோ அடித்துக்கொண்டிருந்ததைப்பார்த்து "என் தங்கம் கலந்து விட்டதோ ?" என்று கேட்டார். பிள்ளை திகைத் தார். 'அன்று வெள்ளி கலந்திருக்கிறது என்ருர்களே, இன்று தங்கம் கலந்து விட்டதோ என்று எண்ணினேன்' என்று இயற்கையான பெரு மிதப் புன் சிரிப்புடன் சொன்ஞர். வாய்ப்பு நேரும் போதெல்லாம் தமிழ் இலக்கியமும் மொழியும் இயற்கையான வளமுடையதாக விருந்தும், தமிழர் களுட் பலர் மேல்நாட்டு ஆராய்ச்சி முறைகளையும், மொழிநூல் தத்துவங் களையும் உணர்ந்திருந்தும், காலத்திற்கேற்ற உயர்வடையவில்லையென்பதை யும், ஒவ்வொரு அறிவுள்ள மாணவனும் அவனவன் தாய்மொழியை வளம் படுத்த முயலவேண்டும் என்பதையும் குறிப்பிடுவார். டாக்டர் இலாசரசும் பல அரிய தமிழ்ச் செய்திகளையும் மேஞட்டறிஞர் பலர் தொகுத்துள்ள பாடங்களையும் சேர்த்துக்கொண்டிருந்தார் எனக்கு அவையெல்லாம் ஏதோ சென்ற உலகமாகக் காணுகிறது".

இந்த நிகழ்ச்சிகளெல்லாம், இயற்கையிலேயே தமிழ்ப்பற்றுடைய என் உள்ளத்தில் அறிவுக்கடங்காத உணர்ச்சியையும், இன்று நான் விளக்க மாகச் சொல்ல வியலாத பல திட்டங்களையும் போட்டுவிட்டன. பிறகு, சில நாட்கள் வேங்கடசாமி நாயுடு கம்பராமாயணத்தில் சில பகுதிகளை எனக்குச் சொல்லிக்கொடுத்து வந்தார். அவர் கும்பகோணம், மன்ஞர்குடி முதலிய இடங்களில் ஐம்பதாண்டுகளுக்கு முன்பு போலீஸ் அதிகாரியாக இருந்து அப்போது ஓய்வு பெற்றவர்; சிறந்த திருமாலடியார்; கம்பரா

மாயணத்தைப் பக்தி நூலாகப் பயின்றவர்; பெரும்பாலும் பாடல்களைப் புத்தகம் கையிலில்லாமலேயே சொல்லுவார். அவர் சொல்லுகிறபடியே என்னை எழுதிக்கொள்ளச் செய்வார். அவர் பாடஞ்சொல்லும் நாட்களில் பெரும்பாலான நாட்கள், அவருடைய நண்பரும், பிள்ளையவர்களிடம் முறையாகப்படித்து கம்பராமாயணத்தில் பிறரறியாத பெரும்புலமை படைத்தவருமான, பட்டீச்சுரம் நாயுடு ஒருவர், உடனிருப்பதுண்டு சில நாட்களில் அந்த நாயுடு இரவு 12 மணிவரை பல அரிய செய்திகளைச் சொல்லிக் கொண்டிருப்பார். முதன் முதலாக வெளிவந்த ஒரு பதிப்பில் பல திருத்தங்கள் குறித்துவைத்திருந்தார். இவர்கள் மூலமாகக் கம்பராமாயணத்தில் பல செய்யுள்களுக்குச் சொற்பொருள் வரையில் தெரிந்துகொண்டதோடு கம்பரது பெருமித நடையிலும், இனியவோசையிலும் ஈடுபட்டு மேலும் படிக்கவேண்டுமென்ற விருப்பங்கொண்டவனானேன்.

இந்த நாட்களில், என் தந்தையாருக்கு நெருங்கிய பழக்கமுடையவரும், சில காலம் எங்கள் ஊருக்கு எதிர்த்த விண்ணாற்றங்கரையில் தங்கியிருந்தவரும், அந்த நாட்களில் கம்பராமாயணத்தில் பெரும் புலமையும் இனிய சொற்பொழிவாளர் என்ற பெயரும் பெற்றவருமாகிய பாலசரஸ்வதி கிருஷ்ணமாச்சாரியார் எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். நான் கம்பராமாயணம் படித்துக்கொண்டிருப்பதைத் தெரிந்து மிகவும் மகிழ்ச்சியுடன் "ஏதாவது ஒரு பாட்டைச் சொல்லிப் பொருள் சொல்லு" எனக் கேட்டார். நான் அன்று படித்ததும் என் நினைவிலிருந்ததுமான "எண்ணிலா வருந்தவத்தோன்" என்ற பாட்டைச் சொல்லிப் பொருள் சொன்னேன்; "எண்ணிலா வருந்தவத்தோன்" என்பதற்கு வேறுவகையாகப் பொருள் செய்யலாமாவென்பதைச் சிந்தித்துப்பார்" என்று சொன்னார்; எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. "பதம் பிரித்துப் பார்" என்றார்; நான் முன் சொன்னமுறையிலன்றி வேறு வகையில் பதம்பிரிக்க முடியாது மௌனமாக விருந்தேன். 'நான் காட்டுகிறேன்" என்று சொல்லி "எண்ணில் + ஆ + வரும் + தவத்தோன்" என்று பிரித்து விசுவாமித்திரன் தவம் மேற்கொண்ட வரலாற்றைக்கூறி மிகவும் வளமாக அவ்வாறு பொருள் கொள்ளுவதின் பொருத்தமுடைமையைப் பேசினார். பின்னர் எண் + நிலா + வரும் + தவத்தோன்; எள் + நிலா + அரும் + தவத்தேன் என்று பல வழியாக சொற்களை உடைத்து இரண்டு மணியளவு சொல்லிக்கொண்டிருந்தார். அவருடைய சொற்களின் இனிமை என்னைக் கவர்ந்தது.

அன்றிரவு வழக்கமாகப் பாடஞ் சொல்லும் வேங்கடசாமி நாயுடும், அவர் நண்பரும், பாலசரஸ்வதி சொல்லிய முறைப்படி "வஞ்சமன்னரை"

எனத்தொடங்கும் கிஷ்கிந்தாக் கண்டச் செய்யுளைப் பல விதமாகப் பிரித்து 'அஞ்சிலம் பதிலொன்றறியாதவன்' என்ற அடிக்கு பத்துக்கு மேற்பட்டவகையில் பொருள் சொல்லி மறுநாள் பாலசரஸ்வதி வரும் போது என்னைச் சொல்லச் செய்தார்கள். முடிவில் எல்லோருமாக இவ்வி தம் பொருள் சொல்லுவது ஒரு விளையாட்டுதான் என்ற முடிவுக்கு வந்த துடன், ஏதோ என்போன்ற சிறுவர்களுக்கு ஒரு ஆர்வமுண்டாக்கும் வகையில் மட்டும் சொல்லலாம் என்றும் பேசிக்கொண்டார்கள். பட்டீச் சுரம் நாயுடு மட்டில் இம்முறையைக் கண்டித்ததோடு இவ்வாறு பொருள் சொல்லும் விருப்பம் படிந்துவிட்டவர்கள் ஏதேனும் இன்னும் சில வகை யில் கூடுதலாகப் பொருள் சொல்லக்கூடியதாகவிருந்தால் தங்கள் இஷ்டப் படி சொற்களை மாற்றியும், கூட்டியும், குறைத்தும், உண்மைப் பாடத்தைச் சிதைத்து விடுவார்கள் என்றும், சிதைத்துமிருக்கிறார்கள் என்றும், பொருளின் ஆழத்திலும் உயர்விலும் அறிவுசொல்ல வேண்டும் என்றும் பேசிக்கொண்டேபோய் 'வாலியை இராமன் கொன்றது நியாயமாகுமா? என்ற கேள்வியைப் புகுத்திவிட்டார். கட்சி இரண்டாகப் பிரிந்து சொற்போர் தொடங்கிப் பல அரிய செய்திகளையும் பேசிக்கொண்டிருந்து ஒரு முடிவுக்கும் வராமலே, நண் பகல் உணவு வேளையையுங் கடந்து கூட்டம் கலையாமலே நடந்துகொண்டிருந்தது. அப்பொழுது அங்கிருந் தவர்களுள், சமஸ்கிருதப் புலமையும், வான்மீகத் தனிப்பயிற்சியும், ஆங்கில மொழித் தேர்ச்சியுமுடைய சடகோப ஐயங்கார், தான் ஒரு முடிவு சொல் லுவதாக வந்து, சமஸ்கிருத ஸ்லோகங்களை இடையிடையே பெய்து பின் வருமாறு பேசினார். "இராமாவதாரம் பூர்த்தியானது, இராவண சம்கா ரத்தாலல்ல, வாலி வதத்தால்தான் என்பது வான்மீகியின் கருத்து. இராமாயணம் முழுவதும் இராமனுடைய செயல்களில் ஒன்றேனும் தவறு டையதல்ல; ஆனால், இராமாவதாரமோ மநுஷாவதாரம் மநுஷனோ குறையுடையவன், தவறு செய்பவன்; ஆகையால், மநுஷாவதாரம் பூர்த்தி யாக வேண்டுமானால் ஒரு குறைவேண்டும்; அந்தக் குறைதான் வாலிவதம்; இதில் என்ன விவாதமிருக்கிறது? இந்த முடிவு இரண்டு கட்சியாருக் கும் ஏதோ துக்கத்தை விளைவித்ததுபோல் காணப்பட்டது. ஆனால் ஒரு வரும் ஒன்றும் எதிர்த்துப் பேச முன்வரவில்லை. வேங்கடசாமி நாயுடு முதிர்ந்த விஷ்ணு பக்தர், அவர் மட்டில் ஏதோ சொல்ல வாயெடுத்தார்; உடனே ஐயங்கார், "வதம் என்றால் என்ன? சம்ஹாரம் என்றால் என்ன? என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டுவிட்டுச் சில சமஸ்கிருத ஸ்லோகங்களைக்கொட்டினார். அந்த சத்தத்தின் முன் எல்லோரும் அசத் தர்களாகி விட்டார்கள். கூட்டமும் கலைந்து சுமார் 3 மணி அளவில் அவரவர்கள் வீட்டிற்குச் சென்றார்கள். வேங்கடசாமி நாயுடுவும், குப்பு

சாமிராஜா என்பவரும் மட்டில் "நாம் என்ன செய்கிறது? கூசாமல் பேசுகிறூர்; அவரும் ஐயங்கார்தான்; நெற்றியிலும் நாமம்தான் இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே சோர்வாகச் சென்றூர்கள்.

இந்த நாட்களில், என் தந்தையாருக்கு நெருங்கிய நண்பராகிய அப்பாவு ஆசாரியார் என்பவர், நீலகிரிக்குச் சென்றிருந்தவர் திரும்ப ஊருக்கு வந்தார். அவருடன் யாழ்ப்பாணத்திலிருந்து முதிய துறவியார் ஒருவரும் வந்திருந்தார். அப்பாவு ஆசாரியரைப் பற்றிச் சுருங்கச் சொல்ல வேண்டுமானுல், வாய்ப்பிருந்திருந்தால் இந்தியாவில் ஒரு எடிசனுக (Edison) அவர் விளங்கியிருந்திருப்பார். பேரறிஞர்; எண்பது ஆண்டுகளுக்குமுன்பே மேல் நாடுகளிலும், அமரிக்காவிலும் வெளியாகும் அறிவு நூல், தொழிற் பயிற்சி முதலிய பகுதினவாய நூல்களையும், தாள்களையும், விடாது அவ்வப்போது பெற்றுப் படித்துத் தன் அறிவை மேம்படுத்திக் கொண்டவர். அக்காலத்து, தமிழ்ப்புலமை, பொறிவலாண்மை (Engineering) மருத்துவம் (Medicin) இவைகளில் முறையே உயர்ந்த பயிற்சி பெற்றுத் திகழ்ந்த முத்துவீர உபாத்தியாயர், இஞ்சினீயர் சுப்பராயாச்சாரியார், டாக்டர் பழனியாண்டி, இவர்களுக்கு நெருங்கிய நண்பரும் உறவினரும் ஆவார். எனக்கு இளமையில் அறிவுநூல், இயற்கை நூல், எண்ணியல் முதலியவைகளை இனிய முறையில் பயிற்றியதோடு ஒலி, ஒளி, நீரின் தன்மை முதலியவைகளை விளக்கும் கருவிகளையும் செய்து காட்டியவர். இவருடைய பேரறிவை அக்காலத்துப் பெரியோர்களுள் நேரிற்கண்டு வியந்தவர், சர். சேஷய்யா சாஸ்திரியார். உடன் பயின்று மகிழ்ந்தவர் வி. கிருஷ்ணசாமி ஐயரும், சர். பி. சிவசாமி ஐயருமாவார். கைத்திறனைக் கண்காட்சி சாலையிற் கண்டு ஆய்ந்து புகழ்ந்து பரிசளித்தவர் சர். சி. சங்கர நாயர், சென்னை கவர்னர் ஆம்பதில் பெருமகன், மைசூர் அரசர் முதலியோர்; இவர் செய்திகள் பலவற்றைச் சொல்ல உளந்தூண்டினும் இயைபின்மை நோக்கி நிறுத்திக்கொள்ளுகிறேன். பெரும்பாலும் எங்கள் வீட்டிலேயேதான் தங்கியிருப்பார். இரவு, நான் இராமாயணம் படிப்பதைப் பார்த்தார், மிகவும் வருந்தினர். "அறிவு வளர்ந்து வன்மைபெறவேண்டிய இளமையில் பயனில்லாமல் இத்தகைய நூல்களை வைத்துக்கொண்டு காலத்தைக் கழிக்க விடலாமா?" என்று என் தந்தையாரிடம் சண்டையிட்டார். "விரைவில் புத்தகத்தை மூடிவைத்துவிட்டுப் படுத்துத் தூங்கு என்று என்னை வெருட்டினர். பாடம் சொல்லிக்கொண்டிருந்த நாயடு இருவருக்கும் மிகவும் வருத்தமாக இருந்தது. "என்ன? ஆவலுடன் பையன் தமிழ்ப் படிப்பதைக் கெடுக்கலாமா?" என்று வேங்கடசாமி நாயடு சிறிது உரிமையுடன் கேட்டார். பல படியாகப் பேச்சு வளர்ந்தது. முடிவில்

ஒருவரை ஒருவர் கடிந்து பேசியதுதான் எனக்குத் தெரிந்தது. மறு நாள் காலையில் சூரியன் புறப்படுமுன்னமே ஆசாரியார் சில படங்களுடனும், சிறு பொறிகளுடனும் என் தலைமாட்டில் வந்து உட்கார்ந்து, கிரேக்க தத்துவ ஞானியர்களாகிய சாக்ரட்டீஸ், பிளாத்தோ, அரிஸ்டாட்டில் முதலியவர்களைப்பற்றியும் நியூட்டனைப்பற்றியும் இனிமையாகப் பேசி அவர்களுடைய படங்களையும் காண்பித்தார். இவ்வாறு அவர் எனக்குப் பயிற்றுவது வழக்கமானதாயினும் அன்றைய பயிற்சி முடிவில் "நம் நாட்டைக் கெடுத்து அடிமையாக்கியது இராமாயணம்; வேண்டுமானல் உன் வாழ்க்கையும் அறிவும் எவ்வகையான பயனுள்ள வேலையும் செய்ய முடியாமல் தளர்ச்சி அடைகின்ற அப்போது படித்துக் கொள்ளலாம். இந்நூலைப் படிப்பவர்களும் பரப்புவர்களும் நாட்டைச் சோம்பேறியாக்கி என்றும் அடிமையாகவே இருக்கச் செய்யும் தீய வஞ்சகர்கள் என்பது என் எண்ணம். இராமாயணம் படித்ததனல் எவன் எந்தப்புதிய இயந்திரத்தைக்கண்டு பிடித்தான்? உழவையோ, தொழிலையோ வளம்படுத்துவதற்கான கருவிகளை எவன் கண்டான்? நாட்டின் அடிமை நிலையைப் போக்கி எல்லோரும் எல்லாச் செல்வமும் பெற்று இன்புற்று வாழவேண்டுமானல் அறிவு நூலும், தொழிற் பயிற்சியுந்தான் உதவுமே யன்றி நீ படிக்கும் இராமாயணம் ஒரு நாளும் உதவாது. மேலும், இந்தப் பருவத்தில் உன் அறிவையும், நெறியையும், ஒழுங்கும், உயர்வும்படுத்திக் கொள்ளுவதற்காக அமைந்த நூல்களைப் படிப்பதையும் முறைகளைப் பின் பற்றுவதையும் விட்டு, இதில் இறங்கியது மடமையின் மாணிக்க முடியாகும்" என்று முடித்தார். உடனிருந்த யாழ்ப்பாணத்துப் பெரியவர் ஆசாரியார் அறிவுரைகளைப் பெரும்பாலும் ஒப்புக்கொண்டது போலவே காணப்பட்டது.

துறவியர் பெருந் தமிழ்ப்புலமை வாய்ந்தவரென்பதோடு, கிரேக்கம் முதலிய பழைய மொழிகளிலும் ஆங்கிலத்திலும் மிகவும் படித்தவரென்று எல்லோரும் பேசிக்கொண்டிருந்தபடியால் எனக்கு, என் புலமையை அவரிடம் காண்பிக்க வேண்டுமென்ற ஆசை தூண்ட, சில பிதற்றி என் மடமையை வெளிப்படுத்திக் கொண்டேன். இரண்டு நாட்களுக்கு முன்பு வேறு வகையில் என் தமிழ்ப்பற்றைப் பார்த்த அவர், மிக்க அன்புடன் "நீ தமிழிற் புலமையடைய விரும்புவது மிகவும் நல்லது. ஆனல், இது முறையல்ல; கம்பராமாயணத்தைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம், அதில் சில பாட்டுக்களை இனிமையாகப் பாடுவதாலும், விளையாட்டாகச் சொற்களைப் பிரித்துப் பொருள் சொல்வதாலும் நீ தமிழ்ப் படித்தவனகி விட முடியாது. இல்லையென்ருல், கம்பனைத்தான் தெரிந்துகொள்ள முடியுமா?

அதுவும் அறவே முடியாது, முறையாகப் படித்தால்தான் எல்லாம் முடியும். முதலில் சிந்தாமணியையும், நச்சினார்க்கினியருரையையும்ஊன்றிப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொல்லித் தன்னிடமிருந்த சிந்தாமணி அச்சுப் புத்தகத்தையும் எனக்குக் கொடுத்துச் சில பாடமும் பயிற்றினார். சங்க நூல்களின் வரலாறும் பெருமையும் இவரிடம் நான் முதன் முதலாக விளக்கமாகத் தெரிந்து கொண்டேன். இவருடைய பழக்கமும், பயிற்சியும் பல அரிய செய்திகளை நான் தெரிந்துகொள்ளச் செய்ததோடு இலக்கண அறிவு எவ்வளவு இன்றியமையாத தென்பதை யும் அவ்வறிவு எவ்வாறு உள்ளத்தில் ஆழப்பதிந்து பயன்தர வேண்டு மென்பதையும், கருவிநூல் கருவியளவில் போற்றப்பட வேண்டு மென்பதை மறந்து, அதை முடிவாகக் கொண்டு பிதற்றல் பேதைமை யின்பாற்படும் என்பதையும், தெரிந்து கொண்டேன். அவருடைய தொடர்பினால் நான் பெறக்கூடிய பயன் முழுவதும் பெறுதற்கிலாது போயிற்றே யெனப் பிற்காலத்தில் நான் பல சமயமும் வருந்தியதுண்டு.

அவர், கடைசியாக என்னிடம் கூறியன :—

" நான் ஆறுமுகநாவலர், தாமோதரம் பிள்ளை முதலியவர்களோடு இளமையில் நண்பனாகப் பழகியிருக்கின்றேன். பழையமுறையில் என் கல்வியைத் தொடங்கினேன். மனத்திலே பொருளும் சொல்லும் நன்கு பதிந்த நூல்களைத்தான் படித்தநூலாகக் கணக்கில் சேர்த்துக்கொள்ளு வது அப்போதைய வழக்கம். பின்னர், மேல்நாட்டுப் பாதிரிகளிடம் படித் தேன். பிறமொழிகளையும், அறிவு நூல்களையும் பயின்றதனால் என் அறிவு விளக்கமானதுடன் நடுநிலைமையும் பெற்றது. அறிவியல் நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்த பாதிரிமார்களுடன் இருந்து வேலை செய்தேன். சங்க நூல்களையும் சித்தாந்த சாத்திரங்களையும் நன்கு பயின்றேன். வளையாபதி, குண்டலகேசி என்னும் இப்போது காணக்கிடைக்காததாகக் கூறும் சுவடிகளைப் பார்த்திருக்கின்றேன். கம்பராமாயணம் அங்கு அதிக பயிற்சியிலில்லை. இதிகாசங்களில் கந்தபுராணந்தான் பெருவழக்கிலுள் ளது. பல பழைய தமிழ்ச் சுவடிகள் அயல்நாட்டுக்குப் போர்த்துகேசிய அரசாங்கத்தாலும், பாதிரிமார்களாலும் கொண்டுபோகப்பட்டன. சோழ நாட்டிலிருந்து எங்கள் நாட்டுக்குக் கொண்டுவரப்பெற்ற கம்பராமாயணச் சுவடிகளை விவிலிய மடங்களில் காப்பாற்றப்பெறும் நூற்றொகையுள் காண லாம். புலவரில்லங்களிலுள்ளன சமயக்கொள்கைகளால் மாற்றம் பெற்று மிருக்கலாம். அவ்வாறு பாடங்களைத் திருத்தலும், மாற்றலும், எடுத் தலும், புகுத்தலும் சமயத்தொண்டாக எண்ணிய புலவர்களும் இடை யிடையே தோன்றாமலில்லை. உரையினால் வரையறை செய்யப்பட்டன

வும், கல்வியுடையவர்களால் பாராயண நூலாகக்கொள்ளப் பெற்றனவுமான நூல்களைத்தவிர ஏனைய நூல்கள் பலகாரணங்களால் பாடவேற்றுமைக் குள்ளாயின. முறையாக, வழி வழி பாடங்கேட்ட மரபில் இவ்வேற் றுமைகளைக் களைந்தெறிவதற்கான பயிற்சி யிருந்தது. நான் உலகியலை விட்டு யோகநெறியிற்புகுந்து நாற்பது ஆண்டுகளுக்கு மேலாயின. பின்னர் மொழிப்பயிற்சியில் ஈடுபடவுமில்லை, வெளிவந்துள்ள புத்தகங் களின் விவரங்களைத் தெரிந்துகொள்ளவுமில்லை. இருபது ஆண்டுகளுக்கு முன்பு சிந்தாமணி முழுவதும் நச்சினர்க்கினியருரையுடன் அச்சிட்ட ஒரு புத்தகத்தைச் சென்னையிலிருந்த திருமயிலை சண்முகம் பிள்ளை என்னிடங் கொடுத்தார். அதில் சிலவிடங்களில் பிழைகளிருந்தன, அவற்றை உன்னிடத்தில் நான் கொடுத்த புத்தகத்தில் திருத்தினேன். சில புலவர்கள் அப்பதிப்புக்கு ஒரு மறுப்பு எழுதி வெளியிட்டதில் என் திருத்தங்களைப் பயன்படுத்திக்கொண்டதாகத் தெரிந்தது. அந்த மறுப் பையும் உன்னிடங் கொடுத்த புத்தகத்திலேயே ஒட்டியிருக்கிறேன். ஏதோ தொடர்ந்ததொரு மனவேறுபாட்டால் அந்த மறுப்பு, விஷயத் தையும் தாண்டிப்போயிருப்பது நல்லமுறையல்ல. சிந்தாமணிப் பதிப்பா சிரியாளவுகூடக் கல்வியும் முயற்சியுமில்லாதவர்கள் வெளியீடுகளைப் பற்றி நாம் பேசவேண்டியதில்லை. இப்போது அச்சிட்டுள்ள கம்பாரமா யணம் பிழை மலிந்திருக்கிறதென்பதைப் பல ஆண்டுகளுக்கு முன்பே கண்டேன். எல்லாத் தமிழ் நூல்களுமே உண்மையான பாடங்களுடன் வரவேண்டும். இம்முயற்சியில் மேல்நாட்டார்களைப் பின்பற்றவேண்டும். தொன்மையரான இலக்கணங்களையும், உரையாசிரியர்கள் கண்ட இலக்கண நுட்பங்களையும். நீ நன்ருகப் படிக்கவேண்டும். என் வாழ்க்கை மாறி விட்டபடியால் இப்போது கிடைக்கக்கூடிய ஓலைச் சுவடிகளைப்பற்றி நான் ஒன்றும் சொல்லமுடியவில்லை. எப்படியேனும் சில பழைய ஏட்டுச் சுவடிகளை நான் மறுமுறை வரும்போது உனக்குக் கொண்டுவருகிறேன். உள்ளந்தெளியாது எதிலும் மேற்செல்லலாகாது; உண்மையைக் காண பதில் ஊக்கம் வேண்டும்; காற்றடிக்கும் பக்கம் சாயும் போலிப் புலமையில் காதல்கொள்ளலாகாது. முருகன் உனக்கு முன்னின்று அருள்க.'' பிறகு, மறுமுறை 1914 ஆம் ஆண்டில் எங்கள் வீட்டிற்கு வந்தார். ஒருநாள் தான் தங்கியபடியால் நான் ஒன்றும் புதிதாகத் தெரிந்துகொள்ள முடியவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள கம்பராமாயணச் சுவடிகள் விவிலிய மடங்களில் தான் உள்ளபடியே வைத்திருக்கிருர்கள் என்றும் புலவரில்லங்களில் காணக்கூடியன அருகிவிட்டன என்றும் நாவலரவர்களுடைய சிவநெறிப் பற்று பல ஏடுகளில் பரவியிருக்கக்கூடும் என்றும் முன் சொல்லியதையே சொன்னர்.

1910 ஆம் ஆண்டில் கரந்தை வித்துவான் சாமிநாத பிள்ளை என்பவர் எனக்கு நண்பராயினர். அவர் நாவலரவர்கள் மாணவர்களுள் ஒருவராகிய விசுவலிங்கம் பிள்ளை என்னும் புலவரின் மகன். கரந்தையில், வித்தியா நிகேதனசபை என்ற ஒரு தமிழ்ச்சங்கத்தை ஏற்படுத்திப் பல புலவர்களை வரவழைத்துச் சொற்பொழிவுகள் நடத்திவந்தார். 1911 ஆம் ஆண்டில் தமிழ்த்தாயின் தனிக்கோயிலாகிய நம்கரந்தைத் தமிழ்ச்சங்கம் தோன்றித் தமிழ் மணம் பரப்பியது. ஆண்டில் இளைஞனாகயிருந்தபடியால் உறுப்பினனாகும் உரிமையைத் தொடங்கிய காலத்திலேயே நான் பெறமுடியாவிடினும் உண்மைத் தொண்டனாக உடனிருந்து இவ்விரு சங்கங்கள் மூலமாகப் பல அரிய சொற்பொழிவுகளைக் கேட்டு வளம்பெறும் வாய்ப்பும், பல புலவர்களுடனும் நெருங்கிப் பழகி நண்பனாகும் நல்லூழும் கிட்டியன. பல கம்பராமாயணப் பிரசங்கங்களும் இடையிடையே நடந்தன. அவையெல்லாம் முக்காற் பங்கு பொருளளவில் ஒத்தும் சொல்லளவில் சிறிது ஏற்றத்தாழ்வு உடையனவாகவுமே எனக்குத் தோன்றின. அந்த நாட்களில் முதுபெரும் புலவராக விளங்கியவரும் இராமாயண வெண்பா என்ற ஒரு நூலை ஆயிரக்கணக்கான வெண்பாக்களால் பாடி முடித்தவருமான சதாவதானம் சுப்பிரமணிய ஐயருடைய கம்பராமாயணப் பிரசங்கத்தையும் இந்தக் கூட்டங்களில் கேட்டிருக்கிறேன். ஆனால், ஒரு மாலை எங்கள் தமிழாசிரியரும், மகா வைத்தியநாதய்யருடைய அண்ணன் இராமசாமி சிவனின் மகனுருமாகிய, வையை, சுப்பிரமணிய ஐயர், "தாய்தன்னையறியாத கன்றில்லை" என்ற கம்பராமாயணப் பாடலை எடுத்துக் சொற்பொழிவாற்றினர். எல்லோரும் தேன் துளிக்கும் நறுமலர் கற்பகக்காவில் வீற்றிருப்பார் போலாயினர். கண்ணீர் ததும்ப உள்ள முருகினர். தம்மை மறந்தனர்; தத்துவங்கடந்த தலைவனைடிணங்கினர். அன்று கம்பன் ஒரு தெய்வம் என்பதை உணர்ந்தேன். பின்னர் எங்களுக்குப் பாடமாகவிருந்த கம்பராமாயணப் பகுதியில் "கரந்தை மத்தமோடெருக்கலர் கூவிளம் கடுக்கை, நிரந்த பொற்சடை நின்மலக்கொழுந்து" என்பதை அவருடைய குயிலொத்த குரலால் பாடியபோது என் கண்முன் சிவபெருமானையே காட்டுவது போல் தோன்றியது. ஒவ்வொரு சொல்லையும் பிரித்து, நேராகப் பொருள் சொல்லி விளக்கியதை இப்போது நான் எண்ணும்போது, தத்துவங்களை ஒவ்வொன்றாகக் கடந்து போவதுபோல் தோன்றுகின்றது. பின்னர் அதே பாட்டை இசையுடன் அவர் பாடிய வொலி இன்னும் என் செவியில் ஒலித்து "இதோ தெய்வம்! இதைப்பார்! என இழுதையேனையும் இழுத்துச் செல்கின்றது. எங்கள் குயிலையா எனக்குக் காட்டிய கம்பன் தெய்வீகப் புலவன்; சாதி சமய சழக்கெலாங் கடந்த சன்மார்க்க வழித் துணை. என்னளவில், அவன் சிவநெறி காட்டிய சேஞ்சுடர்.

இந்த நாட்களில் சித்தாந்த தீபிகை என்ற ஆங்கிலத்திங்கட்டாள், செந்தமிழ், விவேக சிந்தாமணி முதலிய தமிழ்த் திங்கட்டாள்கள் இவற்றின் பழைய தொகுதிகள் முதலியவற்றில் வந்திருந்த கம்பரைப்பற்றிய கட்டுரைகளைப்படித்துத் திருமணம் செல்வகேசவராய முதலியார், சேது சமஸ்தான வித்துவான் இராகவையங்கார், செந்தமிழ்ப் பத்திராசிரியர் மு. இராகவையங்கார், பாண்டித் துரைத்தேவர் முதலிய பெரியோர்கள் கம்பரைப்பற்றியும், இராமயணத்தைப்பற்றியும் கொண்டுள்ள கருத்துக்களையும்,செய்த ஆராய்ச்சிகளையும் நன்கு தெரிந்து தெளிவடைந்தேன். யாழ்ப்பாணம் சி. கணேசையர் எழுதிவந்த பாடவேறுபாடுகள், மறுபடியும் நல்ல பதிப்பு வரவில்லையே என்ற கவலையை உண்டுபண்ணிற்று. இது பற்றி நான் பேசிக்கொண்டிருந்தபோது என் நண்பர் சோமசுந்தர முதலியாரின் தந்தையாரும், தொல்காப்பியத்துக்குத் தனித்த முறையில் ஒரு உரை எழுதிக்கொண்டிருந்தவருமான, கொல்லக்கண்டம், சிங்காரவேலு முதலியார் என்னும் தமிழறிஞர் தனக்குத் தெரிந்தே சில பாடங்கள் மாற்றப்பெற்றிருக்கின்றன வென்றும், சில வைணவத் தொண்டமண்டல வேளாளப் புலர்கள், வாலிவதைப் படலத்துள், திருமாலுக்கு இழுக்கு தரக்கூடும் என அஞ்சிச் சில பாடங்களைத் திருத்தியும், சில பாட்டுக்களை எடுத்தும் படிசெய்துகொண்டுள்ளார்கள்என்றும், பாட வேறுபாடுகளுக்குக் காரணங்களான பல செய்திகளையும் தெரிவித்தார். இப்பெரியாரும் பாட வேறுபாடுகளை ஆய்ந்து உண்மையான பாடத்துடன் ஒரு பதிப்புவர வேண்டுமென்னுங் கருத்துடையவரே.

முப்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் 'கம்பராமாயணம்' என்னும் தலைப்பில் ஒரு சொற்பொழிவு செய்தேன். அக்காலத்தில் கரந்தையில் சொற்பொழிவு செய்தல், தமிழறிஞர்களால் ஒரு பேறுகக் கருதப்பட்டது. தலை சிறந்த புலவர்களும் சங்கக்கூட்டத்தில் கேள்விகளுக்கு விடை கூற முடியாமல் தடுமாறியதுண்டு. எடுத்துக்கொண்ட நூலில் அகரமுதல் னகர விறுவாய் கைவரப் பெற்றவரே அரங்கருகே செல்ல எண்ணுவர். அரை குறை யெல்லாம் அஞ்சும். இந்த நிலையில் என் சொற்பொழிவுக்குத் தலைமை யேற்றவர் சபாபதி பிள்ளை யென்னும் ஒரு அறிஞர். இவர் இளமையில் தஞ்சை பேதுரு கல்லூரியில் பயின்று B A., பட்டம் பெற்றவர். பின்னர் மாவட்டப் பதிவாளராக விருந்து ஓய்வு பெற்றவர். கம்பராமாயணமே, அவருக்கு உண்ணுஞ் சோறும், பருகு நீரும், தின்னும் வெற்றிலையுமாகும். ஆங்கில இலக்கிய வாராய்ச்சி முறைகளையும், உலகியலையும் உரை கல்லாக வைத்துக் கொண்டு கம்பர் திறனை விளக்கிக் காட்டுவார். தமிழ் நாட்டிற் பிறந்தும், வளர்ந்தும், வாழ்ந்தும், அறிவு மேம்பாடுற்றும், தமிழ் மணமே ஒரு சிறிதும்

அறியாத அறிஞர்களெல்லாம் தமிழின் இனிமையைத் துய்த்து ஈடேறித் தமிழ்த் தொண்டாற்ற மனங்கொள்ளும் வகையில் கம்பரைக் கையாண்ட தமிழன்பர்களில் இவரை, காலத்தால் முதல்வராகச் சொல்லலாம். தமிழ் நாட்டு எல்லா மாவட்டங்களிலும் இவர் அரசாங்கப் பணியிலிருந்தமையால் பரந்த தொண்டாற்றும் வாய்ப்பும் பெற்றிருந்தார். இவரை எல்லோரும் 'கம்பராமாயணம்'' என்றே அழைப்பார்கள். இவரோடு பலவாண்டுகள் நெருங்கிப் பழகி நண்பன் என்ற உரிமையையும் பெற்றுள்ளேன். இவர் எனக்குக் காண்பித்த கம்பன் 'உலகளந்த உள்ளத்தான்'.

என் சொற்பொழிவில், நான் நாயடுவிடம் எழுதிப்படித்தமுறையில் கொண்டபாடமாகிய 'கண்ணிலான் கண்ணிழந்தான்' என்பதை வைத்துக் கொண்டு விளக்கமாகப் பொருள் சொன்னேன். தலைவர் அதை மறுத்துக் 'கண்ணிலான் பெற்றிழந்தான்' என்ற அச்சுப்புத்தகத்திலுள்ள பாடத் தையே கொண்டார். கூட்டம் முடிந்தவுடன் எது சரியான பாடம் என்பதை உறுதிசெய்யவேண்டியதாயிற்று. வேங்கடசாமி நாட்டாரை யுள்ளிட்ட பல அறிஞர்கள் அச்சுப் புத்தகத்திலுள்ளதைக் கொள்ளுவது தான் முறையென்று கூறினார்கள். சிங்காரவேலு முதலியாரும், மன்னார்குடி சோமசுந்தரம் பிள்ளையும் நான் சொல்லிய பாடப்படித் தாங் களும் கேள்விப்பட்ட ஞாபகமிருப்பதாகவும், நான் கூறும் பொருளும் நியாயமும் ஒப்புக்கொள்ளத்தக்கதா யிருப்பதோடு ''பெற்றிழந்தான்'' என்னும் பாடத்தினும் சிறப்பாகவிருக்கிறபடியாலும் ''கண்ணிலான் கண் ணிழந்தான்'' என்னும் பாடமே சொள்ளத்தக்கதென மன்ருடினார்கள். முடிவுகூறும் பொறுப்பும், உரிமையும், கடமையுமுடைய சங்கத் தலைவர், த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் இரண்டு கட்சியையும் ஆய்ந்து முடிவுகூறுவதற்குத் தனக்குத் துணையாக அப்பொழுது தஞ்சையில் ஆவணக்களரி துணைப்பதிவாளராகவிருந்த பூவிழுந்தநல்லூர் சுப்பிரமணிய பிள்ளையையும், வக்கீல் கலியாணராம ஐயரையும் சேர்த்துக்கொண்டார். அச்சுப் புத்தகங்களில் காணப்படும் 'கண்ணிலான் பெற்றிழந்தான்' என்னும் பாடமே கொள்ளத்தக்கதென்றும், என் பாடத்திற்கு அச்சுப் புத்தகத்திலிருந்தோ சுவடிகளிலிருந்தோ நான் எவ்வித ஆதாரவும் காட் டாததனல் என் உரை எவ்வளவு போற்றத்தக்கதாகவிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்பெறவில்லை என்றும் ஆறு திங்களுக்குள் நான் ஏதேனும் சுவடிகளிலிருந்தோ, மேற்கோள் ஆட்சியிலிருந்தோ ஆதரவு காட்டக்கூடு மானல்அதன்மேல் ஆராய்ச்சி செய்யப்படும் என்றும் பொதுவாக, ஆவணத் தாலும், ஆட்சியாலும் காட்டப்பெருத பாடங்கள் யூகமாகச்சொல்லப்படு வனவாகக் கருதி ஏற்றுக்கொள்ளப்பெருவென்றும் மூவரும் ஒரே மன தாய் முடிவுகூறிவிட்டார்கள். முடிவை மீற முடியாமலும் ஒப்புக்கொள்ள

மனமில்லாமலும், புறங்கொடுத்தோடுவோன் அம்புபோல நானும் "தகுதி யில்லாதவர்களும் உயர்ந்தவொரு அரசியல் பதவியை எவ்வழியிலாவது பெற்றுவிடுவார்களானல் அவர்களது ஆணைக்கடங்கியும் அவர்களது தகுதி யின்மை நோக்கி அவர்களை அப்புறப்படுத்துவதற்கு அஞ்சியும் நிற்கும் உலகத்தில், எவ்வழியிலாவது ஒரு பாடம் அச்சேறிவிடுமானல் அதை மாற்ற அஞ்சுவது இயற்கையே' என்று சொல்லிக்கொண்டு என்னை அமைதி செய்துகொண்டேன். பழைய நூல்களை அச்சிடுபவர்களுக்குள்ளபொறுப்பு எவ்வளவு கடுமையானது என்பதையும் அவர்களுடைய கவனக் குறைவு ஒரு மொழியை எவ்வளவு சீர்குலைக்கும் என்பதையும் அப்போது உணர்ந்தேன். இந் நிகழ்ச்சியும் கம்பராமாயணப் பதிப்பு நல்ல முறையில் வர வேண்டுமென்ற விருப்பத்தை வளர்த்தது.

மறு நாள் காலையில் பூவிழுந்தநல்லூர் பிள்ளையவர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து பல அன்பு மொழிகள் பகர்ந்து "நீ முதலில் உமாபதி சிவம் தேர்ந்த ஆறு நூல்களையும் ஐயந்திரிபறக்கற்று அதன்படி ஒழுகும் ஒரு கடமையை மேற்கொள்ள வேண்டும்" என்று அறிவுரை கூறினர்கள். பிள்ளையவர்களும் நானும் அன்று முதல் நெருங்கிய தொடர்பு கொண்டோம். என்னைத் தம் மக்களில் மூத்தவனகக் கொண்டு அன்பு பாராட்டினர்கள். சுருங்கச் சொல்ல வேண்டுமானல் பிள்ளையவர்கள் வள்ளுவர் வகுத்த இல்லற வியலுக்கு ஓர் எடுத்துக்காட்டு என்றுதான் கூறுவேன். அவர்கள் வாழ்க்கையால் நான் தெரிந்து பயனடைந்த பண்புகள் பல.

மேற்பகுதியில் குறிப்பிட்டுள்ள மன்னர்குடி சோமசுந்தரம் பிள்ளை சிறந்த தமிழ்ப் புலவராகவிருந்தும் அரசாங்கத்தில் அறக் காவற் பகுதியில் (Police Department) வேலைபார்த்து வந்தமையால் தமிழ்ப் புலவருலகத்தில் இப்போது பலருக்கு அவருடைய பெயர் தெரிந்திருக்க வாய்ப்பில்லாது போயிற்று. வழிவழியாகத் தமிழ்ப் பற்றும், பயிற்சியும் மிகுந்துள்ள நற்குடியில் தோன்றியவர். அவர் தந்தையார் மன்னர்குடி பின்ட்லே கல்லூரியில் (Findlay College) தமிழாசிரியராக இருந்துவந்த பெரும்புலவர். பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் போன்ற பெரும் புலவர்களுட் பலர் இவரிடம் கற்றுத் தேர்ந்தவர்களாவார். நம் பிள்ளையவர்கள் தன் தந்தையாரிடமும், தஞ்சை அரசவைப்புலவர் மருதமுத்து உபாத்தியாயரிடமும் இளமையில் கம்பராமாயணத்தை முறையாகப் பயின்று தேர்ந்தவர். மருதமுத்து உபாத்தியாயரிடம் ஒரு நல்ல சுவடியிருந்ததாகவும், அதை வைத்துதான் அவர் பாடம் சொல்லுவது வழக்கம் என்றும், அந்த சுவடிக்கும்,

(தொடரும்)

N. KANDASWAMY PILLAI,
Member, Senate,
Annamalai Unjversity.

Palliagraharam,
Tanjore, 20–9–'54.

Dear Sir,

With a view to promote the interests of Tamil in the University I sent some questions to be included in the agenda of the meeting of the Senate to be held on the 22nd September '54; but the questions have been disallowed. I am enclosing a copy of the Registrar's letter for your kind consideration and to advise me if I am at wrong.

In my humble opinion I think the information required is essential in any scheme for improving the condition of Tamil in the University and disallowing such questions is unjust. The cause & constituency I represent compel me to place the matter before you whose love for Tamil is not in any way less than mine and seek your advice.

I am also enclosing a copy of my suggestions towards the improvement of Tamil Research Department specially the editing section of Kambaramayanam for your kind perusal and further suggestions. This at least may show my sincerity that my questions should not be treated so unjustly under Statute 25 of Chapter IX of the Laws.

Tanking you.

Yours faithfully,
N. KANDASWAMY.

No. 2399/B1/54. 16th Septr. 1954.

From

THE REGISTRAR,
Annamalai University,
Annamalainagar P. O.,
SOUTH INDIA.

To

Sri N. KANDASWAMI PILLAI,
Palliagraharam,
TANJORE.

Sir,

Sub: Questions given notice of – Meeting of the Senate on 22—9—1954.

Ref: Your letter dated 19—8—1954.

I am to inform you that the following questions given notice of by you to be answered by the Syndicate at the meeting of the Senate on 22-9-1954 have been disallowed under the provisions of the Statutes noted against them. These questions will not therefore be included in the Final Agenda for the meeting of the Senate

## QUESTIONS.

Statutes under which they are disallowed.

Q. I. Will the Syndicate be pleased to state:

(1) The order of importance given in the University activities for Tamil as (a) Reginal Language and the methods adopted for development, and the departments and personnel in charge of these activities; — Statute 25 of Chapter IX of the Laws.

(b) Classical language, and the intellectual qualities and discipline sought to be developed in this branch of studies, the methods

adopted and the departments and personnel in charge of this group of studies.

(c) Medium of instruction in the studies of arts and sciences at the University level of learning and achievment in this direction within this quarter of a century of this University's existence.

(2) The amounts spent within the last five years on the following items for (a) Tamil Departments, and (b) other departments :— Statute 25 of Chapter IX of the Laws.

(1) Buildings, (2) Teaching Staff, (3) Clerical Staff, (4) Menial Staff, (5) Stationery, (6) Printing and publishing (7) Scholarships for foreign studies, (8) Studentships, (9) Fellowships, (10) Maps, plans and other illustrations, (11) Equipments and scieniific aids, and (12) Furniture.

(3) The Capital value and Annual value of endowments, subsidies, grants, and donations, created and given for the development of Tamil studies with the full details of donors and terms of donations.

Q. II. Will the Syndicate be pleased to state :

(1) The Aims and Objects of the Tamil Research Department;

(2) The Principle and Plan adopted by the Tamil Research Department;

(3) The Programme and Progress of the Department in the last five years, and the future progrogramme for the coming five years; Statute 25 of Chapter IX of the Laws,

(4) The works completed by the members of the department, (with the details of their size, category, the section of people and need they serve, the number of copies printed, sold, given free and sent for opinion) within the five years;

(5) The works published within the last five years with full details as above, and the works that

await publication, and the period by which they may be puhlished;

(6) The principle adopted for the order of preference in publication;

(7) The appropriateness of bringing the 'History of Later Cholas' under the Tamil Research Department while other works on history are brought under History Department;

(8) The stage at which the creation of a Chair in Tamil stands at present and the scheme of work adopted;

Statute 25 of Chapter IX of the Laws.

(9) The details of Expenditure incurred and proposed to be incurred from the budget provision of Rs. 50,000 sanctioned under new Schemes for enlarging the scope of Tamil Research in the current year.

Q. III. Will the Syndicate be pleased to state :—

(1) Whether the researches in the Tamil Research Department are done by the members of the staff independently or under the direction and guidance of the Head of the Department;

(2) Whether any periodical report is submitted by the Head of the Department as to the details of the work done by the members of the department, and the guidance and direction given by the Head of the Department; if so, the details for the last iwo years;

Statute 25 of Chapter IP of the Laws.

(3) Whether any committee was appointed at any time within the last five years, and the details of the personnel of the committee and the report or review;

(4) Whether the candidates selected for appointment in the Tamil Departments at the beginning of this academical year do possess the University qualifications required by the advertisement, if not, whether the relaxation made in the requirement of qualifications were advertised, so that the deserving people

without the qualifications as required originally may have an opportunity of applying for those posts; if not whether the Syndicate favours the practice of asking one thing and accepting a different thing;

(5) Whether there is any difference in the methods of imparting instruction in and about Tamil between Arts Department and Oriental Department of Tamil.

(6) Whether it is a fact that the undermentioned expressions are found in the congratulatory addressess circulated by the members of the Tamil department.

(1) அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவிய பெருங் கொடை வள்ளல் டாக்டர் செட்டிநாட்டு ராஜா சர் மு. அ. அண்ணாமலை செட்டியார் அவர்களின் இருபத்து நான்காவது பிறந்த நாள் விழாவில் பாடிய வாழ்த்து.

(2) தமிழ் (ஓரியண்டல்) பகுதியைச் சார்ந்த ......... Statute 25 of Chapter IX of the Laws.

If so, does item No. 1 express the function on which it was given, correctly and clearly? Does item No. 2 agree with the rules of grammar? If not, what are the steps taken to avoid further recurrence?

(7) Whether the necessary models and scientific equipments to facilitate teaching and comprehension of the organic and acoustic sides of Phonetics, are supplied to the Tamil Department, teaching Phonetics;

(8) Whether the Tamil Research Department is interested in investigating matters of interest to Tamil learning and Researches that may appear in current journals, if so, has the department investigated the alleged finding of the life of Saint Manickavasagar written some centuries back in Sanskrit?

(9) Whether all, or any of the Tamil departments are provided with separate offices, Typewriters and stenographers,

Q. IV. Will the Syndicate be pleased to state regarding the Kambramayanam Edition work :—

(1) Whether any stock has been taken of the Printed works and the manuscripts available at the commencement of the work ;

(2) Whether any attempt was made at the beginning of the work to collect or get into touch with, all the available materials ;

(3) The list of persons and institutions to whom enquiries regarding Mss. were sent, and their replies with dates ;

(4) Whether any sample surveys were made, and statistical analysis prepared, for fixing the values of the available Mss.

(5) The details of the survey and analysis ;

(6) Whethcr the methods followed in fixing readings are Conservative or Conjectural ;

(7) The details of records maintained for future reference and as guidance for further editorial undertakings ;

Statute 25 of Chapter IX of the Laws.

(8) Whether the work proceeds in Individualistic basis or Institutional basis;

(9) The coefficient of purity, the coefficient of variation, and correlation coefficient as revealed by the study of the Mss. taken into consideration ;

(10) Whether any scientific method is adopted in fixing readings ;

(11) The system of co-ordinates adopted for fixing correct readings ;

(12) The expenditure incurred by the University up to the end of July 1954 and the estimated cost of completion ;

(13) The details of work completed up to the end of July and the probable period by which the whole work will be completed.

(14) The cost of collation, the number of verses collated, the number of printed books, the number of manuscripts collated;

(15) The number of members of the staff engaged in the collation work with their salaries;

(16) Whether the cost of collation, works favourably with the standard rate paid by manuscript libraries and the rate per standard unit of Stichometrical measurement common in our parts;

(17) The number of verses for which reading is fixed and the cost of fixing the readings with the details of members engaged in this part of the work;

(18) Percentage of readings fixed by the department which are not found in any of the printed books. Statute 25 of Chapter IX of the Laws.

(19) Whether any uniform format has been fixed for the volumes to be published and estimate worked out for the cost of printing and paper; the details;

!20) Whether the complete editions of Sundarakandam by Govinda Pillai (Nearly a century old), Krishnamachariar; selections by Kapisthalam Moopanar; Madras University; prose version found in a manuscript in the Tanjore Palace Library were compared in fixing readings for Sundarakandam to be published in the immediate future;

Q. V. Will the Syndicate be pleased to state :—

(1) Whether any agency or committee has been created or constituted to scrutinise the plan and estimates, supervise the execution as per standard specifications, and pre-audit the bills of all the building and other engineering works of the University and whether that body and its personnel will be responsible to

the Senate, jointly and severally, legally and financially, if any loss or damage is caused to the University by faulty design, inefficient execution, or careless accounting ;

(2) Whether any system is followed to evaluate periodically the efficiency and intellectual qualities, moral and personal influences of the Heads of the Department who are responsible for the efficiency and extension of usefulness of their departments.

(3) Whether the contemplated "Comprehensive Bibliography of Tamil Literature" is planned to contain only books and articles of literary standard or all and sundry found in Tamil ;

(a) Whether sufficiet information has been obtained as to the projects of similar nature contemplated or commenced by other cultural associations interested in Bibliography so that duplication of work may be avoided ; Statute 25 of Chapter IX of the Laws.

(b) Whether the estimate has been prepared towards cost of its preparation and publication ; if so, to what amount it works ;

(c) Whether the materials from the Madras Library Association were got on loan, or got free, or purchased by the University ; at what cost ?

(d) Whether the materials taken for work are items indexed after personal examination of the books ciassified, or copies taken from the already existing bibliographies or indexes prepared from the list of Registrar of Books, the date upto which the list has been prepared.

(e) Whether any arrangement has been made to bring the list up to date and what cost ;

(f) The system of classification adopted for this bibliography ;

(g) Whether thc list would contain books and articles and the number of articles listed in the materials got from the Library Association ;

Statute 25 of Chapter IX of the Laws.

(h) The list of periodicals taken for indexing articles.

---

Yours faithfully,

(Sd.) T. D. MEENAKCHISUNDARAM,

Registrar.

# வஞ்சப்போர்.

வித்துவான் ச. பாலசுந்தரம், விரிவுரையாளர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

---

(முற்றொடர்ச்சி துணர் ௩௰—மலர் ௩—பக்கம் 83.

முனிவர் :— கணக்காக எத்தனைபேர் மாண்டிருப்பார்?
கரிபரிமா எவ்வளவு? கருதிச் சொல்க!
உனக்குவரும் திறைப்பொருளின் தொகையும் சொல்க!

அரசன் :— ஒன்பதினு யிரத்தெழுநூற் றைம்பான் வீரர்
எனக்குவரும் திறைபதினு யிரம்பொன் ஆங்கே
இறந்தபரி ஆயிரமாம் யானை நூறு

முனிவர் :— பிணக்காட்டில் அழிந்தபொருள் மதிப்பைக் கூறு?

அரசன் :— பெரும்பாலும் அரைலட்சம் பொன்னிருக்கும்

முனிவர் :— திறைப் பொருளால் நீபுரியும் செயல்கள் யாவை?

அரசன் :— செம்மை பெற என்நாட்டை வாழச் செய்தல்
சிறப்பான படைகளுக்குச் செலவு செய்தல்
சிறிதளவு கல்விமுதல் மற்றவைக்காம்

முனிவர் :— இறைப்பொருளால் நீ புரியும் செயல்கள் யாவை?

அரசன் :— இனிய விழா கலைவளர்த்தல் எங்கள் நன்மை
வருத்தமுறு குடிகளுக்கு வழங்கல் மற்ற
வழக்கமுள்ள செலவுகளும் இதனாற் செய்வேன்

முனிவர் :—அழிந்தபொருள் அரைலட்சம் ஆகுமென்றால்
அரைகோடிப் பொருள்சேதம் அன்றோ? போரில்
கழிந்த உயிர் கால்லட்சம் ...... மன்னா! உன்னால்
கடுகளவு உண்டாக்க முடியுமாசொல்?
வழிந்துவரும் தங்கையுடைக் கண்ணீர் கண்டு
வருந்துகிறாய் வாடுகிறாய் இந்தப் போரில்

ஒழிந்தவரின் மனைவியர்கள் விட்ட கண்ணீர்
ஒரு கடலாம் உண்மையினைச் சிந்தித்துப்பார் !
உங்களிலே ஒருவருக்காய் உருகுகின்றீர்
ஊர் முழுதும் அழிந்ததைநீர் உணரவில்லை
பொங்குமிள வீரர்பல ஆயிரம் பேர்
போர்க்களத்தில் மாண்டனரே அவர்தம் சுற்றம்
இங்ஙனமே வருந்தாவோ ? எல்லை யற்ற
யானைபரி விலங்கினங்கள் இறக்கச் செய்தீர்
தங்குபுகழ் என்றுபல கொலைபு ரிந்தீர்
தண்ணீராய்க் குருதி வெள்ளம் ஓட விட்டீர்
பிள்ளைகளைப் பறிகொடுத்துப் பெற்றோர் ஏங்கப்,
பிறந்தவரைப் பிரிந்தவுடன் பிறந்தார் வாட,
கிள்ளையெனும் மைந்தர்களை இழந்து நிற்கும்
கிழத்தாய்கள் எத்தனைபேர் 'அலறி ஏங்கப்'
பிள்ளைவயி றுடையவரும் இளம்பெண் டீரும்
பெருமைதரும் கணவர்களை இழந்து சோர,
கொள்ளையிட்டீர் ஏழைகளின் பொருள் கவர்ந்தீர்.
குழந்தைகள் தம் பெற்றோரின் பிரிவால் கூவப்
போர்புரிந்து நாடுகொண்டு புகழை நாட்டல்
புதுமையினும் புதுமை ! இது புகழோ கூறு?
நீர்வறந்த ஏரியுடன் நீண்ட சோலை
நிழல் மரங்கள் அற்றபெரும் வழியும் ஊரும்
சீர்பிரிந்த மாதருடன் செழுமை இல்லாச்
சிறுநிலமும் செழுஞ்சுடர்கள் இல்லாவானும்
யார்விரும்பி மகிழ்வார்கள் மக்களைக்கொன்(று)
அடைகின்ற வெற்றிகளும் அவைபோ லன்றோ ?
மழை, காற்று வான்நிலந்தீ சுடர்கள் எல்லா
மக்களுக்கும் பேதமின்றி வழங்கக் கண்டோம்
பிழையான பேதத்தால் தன்னினத்தைப்
பிணக்காடாய்ச் செய்கின்றார் மக்கள் ... என்னே!
உழையாத வாழ்க்கையினை உயர்ந்த தாக்கி
உழைப்பவரைத் தாழ்வாக எண்ணு கின்றார்

குழையாத நெஞ்சுடையார் செய்யும் தீமை
கொஞ்சமல்ல விலங்கினுள் இப்பேத முண்டா?

**அரசன் :—** வேந்தருக்கு வகுத்தநெறி போர்புரிந்து
வீரமுடன் ஆட்சிசெய்தல் அன்றோ.........

**முனிவர் :—** மன்னு!

மாந்தருக்குள் இதுவரையில் எதிர்பே இல்லா
மாவீரன் யாரேனும் உதித்த துண்டோ?
சாந்தநெறி ஒன்றேஇத் தரையில் மேலாம்
தகைமை தரும். தனியொருவன் வாழ்வதற்கே
போந்ததெனின் இவ்வுலகம் பொன்றல் மேலாம்,
புவிவாழ்வு யாவருக்கும் பொதுமையன்றோ?
உறுப்பாலும் பிறப்பாலும் ஒரு படித்தாய்
உதித்தவருள் 'உயர்வென்றும் தாழ்ச்சி' என்றும்
வெறுப்பான பிரிவுகளை ஆக்கித் தங்கள்
வீங்குடலின் வலியாலும் வீரத்தாலும்
"சிறப்பானேம், பிறர்எங்கள் அடிமை" என்றும்
செப்பியிந்த உலகினையே சீரழித்தீர்,
மறுப்பாரை வஞ்சத்தால் மாய்த்தீர், உங்கள்
மகிழ்ச்சிக்குப் பலமான அரணும் செய்தீர்.

**அரசன் :—** எல்லோரும் சமமென்ற உண்மை தன்னை
இன்றேயான் உணர்ந்தேன்இப் பொருண்மை யாதும்
கல்லாமல் வெறுஞ் சொற்கள் கற்றேன் என்றன்
கடமையினை உணர்த்தியநல் அறிஞ! தங்கள்
சொல்லாலே தூயமனம் பெற்றேன் இன்றே
சுதந்திரராய் யாவரையும் செய்வேன் சத்யம்
வல்லாண்மை யாலும்வில் வேல் வாளாலும்
மாள்வதன்றிப் புவிவாழா தென்றுணர்தேன்

[நடுக்கத்துடன்]

தங்கையினை எவ்வகையில் ஆற்றுவேன்என்
தவறாலே அவள்வாழ்வு தவறிற் றையோ!

(தொடரும்)